UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)
ARIMAA NOKKU
ISSN: 2320 - 4842 (P)
ISSN: 3049-2688 (O)
19 - 4 Oct - Dec 2025
Published on 14, Oct-Dec 2025 ISSN:2320-4842 (P) 3049-2688 (O)

# களவியல் கூட்டம்: தொல்காப்பிய உரைமேற்கோள்

**மு. துர்கா**
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம், மெரினா வளாகம்
சென்னை – 600 005

தொல்காப்பியப் பொருளதிகாரத்தின் மூன்றாவது இயல் களவியல். தொல்காப்பியர் அகப்பொருளைக் களவு, கற்பு என இரண்டாகப் பிரித்து இலக்கணம் வகுத்துள்ளார். அன்போடு கூடிய ஐந்திணை ஒழுகலாற்றின் முதலாவது நிலை களவு. இதனைக் களவுக்கூட்டம், காமக்கூட்டம் எனக் கூறப்படுவதும் உண்டு. இது தலைமகனும் தலைமகளும் ஒத்த அன்பும், உணர்வும் உடையராய் ஊர் உலகு அறியாமல், பெற்றோரும் உற்றாரும் அறியாமல் இருவர் உள்ளத்துணர்வால் மறைவாக நிகழ்த்தும் கூட்டமாதலின் களவுக்கூட்டம் என்னும் பெயர் பெற்றது. அதனால் இதற்கு ‘மறை’ என்னும் பெயரும் உண்டு.

“மறையென மொழிதன் மறையோ ராறே” (தொல்.பொருள்.கற்பு 487)

“மறைவெளிப் படுதலும் தமரின் பெறுதலும்” (தொல்.பொருள்.கற்பு 488)

என்பன இதனைப் புலப்படுத்தும். களவியலின் அமைப்பைப் பார்க்கும்போது, களவுக்கால நிகழ்ச்சிகளை வேட்கை முதல் தெளிவு அகப்படுதல் வரை இரண்டு நூற்பாக்களில் சுட்டுகிறார் தொல்காப்பியர் (தொல்.பொருள்.களவு.நூற்.97,98). தொடர்ந்து தலைவன் கூற்று, தலைவி கூற்று, தோழி கூற்று, செவிலி கூற்று முதலிய கூற்றுகளும், இக்கூற்றுகளுக்குரிய மரபும் கூறப்பட்டுள்ளன. களவியலின் பெரும் பகுதி இக்கூற்றுகள் கூறும் பகுதியே ஆகும். தொல்காப்பியர் களவியலில் தலைவன் அல்லது தலைவிக்கு நிகழும் கூற்று வகைகளைத் தொகுத்துக் கூறுகிறாரேயன்றி, களவின் பகுதி இத்தனை என்ற பாகுபாட்டை அவர் கூறவில்லை. “களவிற் கூட்டம் நான்கினிடத்தும் தலைவன் கூற்று நிகழுமாறு, காதல்மிக்கு ஆற்றாமை கையிகப்பின் தலைவனாம் இயலும் கூறுதல்” (தொல்.பொருள்.களவு.பக் 99) என்று கூறியுள்ளார். களவிற் கூட்டம் நான்கினிடத்தும் என்பது இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியற் கூட்டம் என்ற நான்கும் களவின் இலக்கணம் ஆகும். இவற்றுடன் வரைவுகடாதல், உடன்போக்கு ஆகிய இரண்டையும் களவில் அமைப்பார். ஆனால் தொல்காப்பியர் மேலே காட்டிய நான்கும் களவு இலக்கணங்களின் பாகுபாடுகள் என்று கூறவில்லை. தொல்காப்பிய உரையாசிரியர்களான இளம்பூரணர், நச்சினார்க்கினியரின் இத்தகைய கருத்திற்கான காரணங்களை ஆராயும் விதமாக இவ்வாய்வுக் கட்டுரை அமைகிறது.

களவு என்னும் களவுக்கூட்டம் பெரிதும் இரு திங்கள் அளவாகிய குறுகிய காலத்தில் நிகழக்கூடியது. தலைமகனும் தலைமகளும் முதன்முதலாக எதிர்பாராவகையில் காணும் உள்ளப் புணர்ச்சி இயற்கைப் புணர்ச்சி ஆகும். அடுத்து, அவ்விடத்திலேயே இரண்டாம் நாள் கூடுதல் இடந்தலைப்பாடாகும். அடுத்து, தலைமகன் பாங்கன் அறிவுரை உதவியோடு நிகழும் பாங்கற் கூட்டம். இறுதியில் தலைமகன் பாங்கியின் உதவியோடு நிகழும் பாங்கியிற் கூட்டம், இந் நான்கு கூறுடைய, தலைமகன் தலைமகளது உள்ளுணர்வு ஒன்றிய நீண்ட மறைமுகக் குடும்ப வாழ்வின் புதுமுக வழித்தடமே களவு எனப்படும்.

இக்களவு முறைமையை நான்கு பகுதியாக அமைத்துச் செய்யுளியளில் களவின் இலக்கணம் கூறப்படும்.

**காமப் புணச்சியு மிடந்தலைப் படலும்**

**பாங்கொடு தழாஅலுந் தோழியிற் புணர்வுமென்**

**றாங்கநால் வகையினு மிடைந்த சார்வொடு**

**மறையென மொழிதன் மறையோ ராறே**

(தொல். பொருள். செய் - 487

களவு பெரிதும் புணர்வுடன் கூடியது. ஆகவே, அதற்குக் காமப்புணர்ச்சி, களவுப்புணர்ச்சி, இயற்கைப்புணர்ச்சி, தெய்வப்புணர்ச்சி என்னும் புணர்வு குறித்த பெயரும் உண்டு. இயற்கைப் புணர்ச்சி முதல் களவு வெளிப் படுதல் வரை தலைவனுக்கும் தலைவிக்கும் பொருந்தும் இலக்கணம் ஒன்பது என்பர் தொல்காப்பியர். இவற்றை மெய்யுறுபுணர்ச்சி நிகழும் காலம் என்பார் இளம்பூரணர் (தொல்.களவு. பக்-217).

**“வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்**

**ஆக்கஞ் செப்பல் நாணுவரை இறத்தல்**

**நோக்குவ எல்லாம் அவையே போறல்**

**மறத்தல் மயக்கஞ் சாக்காடு என்றிச்**

**சிறப்புடை மரபினவை களவென மொழிப**

(தொல்.பொருள்.களவு.நூற்-9)

தலைமகனுக்கும் இவ்வாறே இயற்கைப் புணர்ச்சியைத் தொடர்ந்த நிகழ்வுகள் பல உள்ளன. அவை, முன்னிலையாக்கல், சொல்வழிப்படுத்தல், நன்னயம் உரைத்தல், நகநனியுறாஅ, அந்நிலையறிதல், மெலிவு விளக்குறுத்தல், தன்னிலை உரைத்தல், தெளிவகப்படுத்தல் ஆகியனவாகும். களவில் தலைவன் கூற்றுகளைக் கூறும் சூத்திர உரையில் இளம்பூரணர், “மெய்யுறுபுணர்ச்சி யினைப் பால் கூட்டும் நெறி வழிப்பட்டுப் பெற்றார்க்கு மெய்தொட்டுப் பயிறல் முதல் அறுதுறையே இன்றியமையாத் துறையாக, ஏனைய இரண்டும் இடந்தலைப் பாட்டிற்கும் சேந்த துறையாகலின் பொதுப்பட இரண்டிற்கும் நடுவே வைத்துச் செப்பம் ஆக்கினாரென்க” (தொல்.களவு.பக்-224) என்று உரை எழுதியுள்ளார். இப்பகுதியில் மெய்தொட்டுப் பயிறல் முதலியவற்றை இளம்பூரணர் துறை என்ற பெயரால் அழைப்பதை உதாரணமாகக் காட்டலாம்.

இறையனார் அகப்பொருள் என்ற இலக்கண நூல் களவு, கற்பு என இரண்டு பிரிவாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவற்றுள், களவு முப்பத்தி மூன்று நூற்பாக்களால் சொல்லப் பட்டுள்ளது. இதில், இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம், பாங்கியிற் கூட்டம் ஆகிய நான்கு வகைகளும் உள்ளன. இவற்றில் தோழியிற் கூட்டத்தில் மதியுடம் படுதல், முன்னுறவுணர்தல், குறையுற உணர்தல், இருவரும் உள்வழி அவன் வரவுணர்தல் முதலியவை கூறப்பட்டுள்ளன. மேலும் அறத்தோடு நிற்றல், கிளவினுள் இடையீடு, பகற்குறி, இரவுக்குறி, அலர், வரைவுகடாதல் முதலியன சொல்லப்பட்டு ள்ளன. இந்த முப்பத்து மூன்று நூற்பாக் களில் இப்பொருள்கள் அனைத்தும் சொல்லப் பட்டுள்ளதால் கிளவிகள் எல்லாம் விளக்கமாக இல்லை.

**அன்பி னைந்திணைக் கலவெனப் படுவ**

**தந்தண ரருமறை மன்ற லெட்டினுட்**

**கந்தருவ வழக்க மென்மனார் புலவர்”**

(இறை. களவு-1)

**ஆங்ஙனம் புணர்ந்து கிழவோன் றன்வயிற்**

**பாங்க னோரிற் குறிதலைப் பெய்தலும்**

**பாங்கிலன் றமியோ ளிடந்தலைப் படலுமென்**

**றாங்க விரண்டே தலைப்பெயன் மரபெ**

(இறை.களவு-3)

என்று களவியலுரைக்குரிய பாகுபாடுகளை வரையறுத்துக் கூறியுள்ளார். எனவே, தொல் காப்பிய நூல் அமைப்புடன் இந்த நூலின் அமைப்பை ஒப்பிடும்போது கூற்று முறையி லிருந்து மாறி வரிசையாக நிகழ்ச்சிகளை அடுக்கும் போக்கில் இறையனார் களவியல் செல்வதைக் கவனிக்கலாம்.

இந்நூலையும் உரையையும் நோக்கும்போது கிளவிகளை வரிசைப்பட அமைத்தல் என்னும் நெறியில் இது தொல்காப்பியக் களவியலில் இருந்து மாறுபட்டுள்ளது என்பதை நோக்கு தல் வேண்டும். தொல்காப்பியத்தில் முற்பகுதி யில் கூற்றுகளைத் தொகுத்துக் கூறுதலும், பிற்பகுதியில் கூற்று நிகழ்த்துதலின் மரபு முதலிய பிற இலக்கணமும் அமைய நூல் இயற்றியது போல் அல்லாமல், இந்நூலி லேயே அவற்றுக்கு விளக்கமும், மரபும் முதலிய பிற இலக்கணங்களும் சொல்லப் பட்டுள்ளன. மற்ற அகஇலக்கண நூல்களும் இதே அமைப்பை முன்னெடுத்துச் சொல்லு வதை நோக்கும்போது, இதற்கான அடிப் படையை இட்டுச்செல்லும் முதல் நூல் இறையனார் களவியலே என்பதை அறிந்து கொள்ள முடிகிறது. தொல்காப்பியத்திற்குப் பின் தோன்றி, இன்று இல்லாமல் மறைந்து போன இலக்கண நூல்களைத் தவிர்த்துப் பார்க்கும் போது மேற்கூறிய முடிவு பிழைபட்டதாகாது.

தமிழ்நெறி விளக்கத்தில், அகப்பொருள் இலக்கணம் முழுதும் சொல்லப்பட்டிருப்பி னும் களவு, கற்பு என்ற இயல் பாகுபாடு இல்லை. எனினும் களவு பகுதி முடிந்த பின் கற்பு தொடங்குகிறது. இந்த இரண்டின் தொடக்கத்திலும் இவற்றை வரையறுக்கும் நூற்பாக்கள் உள்ளன. இருபத்தைந்து நூற்பா க்களில் களவின் இலக்கணத்தைக் கூறும் நூற்பாக்கள் ஏழு. முதல் நூற்பா களவின் இலக்கணம் கந்தர்வத்தை ஒத்தது என்று கூறுகிறது.

**முந்திய நூலோர் மொழிந்தவெண் மணத்திலும்**

**கந்திருவ முறைமை களவெனப் படுமே**

(தமிழ் நெறி. விள-14)

அடுத்த நூற்பா இயற்கைப் புணர்ச்சியின் நிகழ்ச்சிகளைக் கூறுகின்றது.

**தன்னயந் தெளித்தலுந் தலைப்பிரி வச்சமும்**

**இன்னியல் வன்பொறை யெய்துத லருமையும்**

**உயிரெனக் கூறலு மாற்றினன் பெயர்தலும்**

**செயிர்தபு காதற் றெய்வப் புணர்ச்சி**

(தமிழ் நெறி.விள.நூற்-15)

ஆகியவை நான்கும் இயற்கைப்புணர்ச்சிக்கு அடிப்படையாய் அமைவன ஆகும். அடுத்த நூற்பா பாங்கற் கூட்டம் கூறுகிறது. இதில் பன்னிரெண்டு நிகழ்வுகள் கூறப்பட்டுள்ளன. தோழியிற் கூட்டம் - பகற்குறி, இரவுக்குறி என்று இரண்டு நூற்பாக்களில் சொல்லப் பட்டுள்ளது. வரைவு கடாதலும் (தமிழ் நெறி. விளக்.நூற்-19), உடன்போக்கு வலிதலும் (தமிழ் நெறி. விளக்.நூற்-20) ஒவ்வொரு நூற்பாக்களில் சொல்லப்பட்டுள்ளன. இங்குக் கூறப்பட்ட ஒவ்வொரு பொருள் குறித்தும் வரும் நிகழ்வுகள் அனைத்தும் வரிசை முறைப்பட சூத்திரத்தில் கூறப்பட்டுள்ளன. உரையில் இவற்றுக்கு விளக்கம் என்று பெரிதாக இல்லை. ஒவ்வொரு கிளவியையும் எடுத்து, அவற்றுக்கு உதாரணம் தரப்பட்டு ள்ளன. ஆனால் மூலத்திலேயே கிளவியின் பெயர் வரிசைப்பட அமைந்துள்ளன.

இதை இறையனார் அகப்பொருள் உரையுடன் ஒப்பிட்டு நோக்கும்போது, அந்த நூலில் உரையாசிரியர் எழுதியுள்ள விளக்கமெல்லாம் இங்கு மூலத்தில் மட்டும் உள்ளன, உரையில் இல்லை. எனினும் நிகழ்வுகள் வரிசைமுறை யில் அமைக்கப்பட்டுள்ளதை நோக்கும் போது இறையனார் களவியல் நூலிலிருந்து இந்த நூல் மாறுபட்டுள்ளது. இந்த நூலில் களவுக் காலத்தில் தலைவன், தலைவி, தோழி இவர்களின் இயல்புகளோ, பிற இலக்கணங் களோ உணர்த்தப்படவில்லை.

நம்பியகப்பொருள் என்ற இலக்கண நூலின்

இரண்டாவது இயல் களவியல் ஆகும். இந்த நூல் கிளவிகளை தொகை, வகை, விரி என மூன்று வகையிலும் கூறியுள்ளது. முதலில் களவிற்கு உரிய பதினேழு கிளவித் தொகைகள் கூறப்பட்டுள்ளன. களவியலில் நிகழும் எல்லா நிகழ்ச்சிகளுக்கும் உரிய கிளவிகள் இந்த பதினேழுக்குள் அடங்கி விடும். பின்பு இவை ஒவ்வொன்றின் வகை களும் அதன் விரிவுகளும் கூறப்பட்டுள்ளது.

தொல்காப்பியரும், இறையனாரும் களவிற் குரிய இலக்கணத்தை வகுத்துரைத்தனரேய ன்றி, களவிற்குரிய கிளவித்தொகை இவை யிவையென தொகுத்துரைத்தாரல்லர். நம்பியார் இயற்கைப்புணர்ச்சி, வன்புறை, தெளிவே (நம்பி.களவு-1,2,3) என்ற நூற்பா வில் பதினேழு கிளவித்தொகைகளை எடுத்துக்காட்டுகின்றார். நம்பியார் கூறிய கிளவித்தொகைகளில் சில தொல்காப்பியத் தில் கூற்று வகைகளாகச் சுட்டப்பட்டுள்ளன. எனினும் அக்கூற்றுகளையும் விவரித்தும் தொகுத்தும் கூறுவது நம்பியாரின் தனிச்சிறப்பாகும்.

## முடிவுரை

தொல்காப்பிய இலக்கண அமைப்பு, கூற்று களைத் தொகுத்துக் கூறுவதும், கூற்றுகளு க்கு உண்டான மரபுகளைக் கூறுவதும் என அமைந்துள்ளது. கூற்றுகளுக்குப் பின் களவில் தலைவன், தலைவி, தோழி ஆகி யோர் இயல்பு கூறப்பட்டுள்ளது. தொடர்ந்து, பகற்குறி, இரவுக்குறி ஆகியவற்றின் இலக்கணமும் இயல்பும் உரைக்கப்பட்டு ள்ளன. இறுதியில் உள்ள இரண்டு நூற்பா க்கள் வரைவு பற்றியவை. தொல்காப்பிய நூற்பாக்கள் இவ்வாறு அமைந்திருக்க தொல்காப்பிய உரையாசிரியர்கள், தொல் காப்பியர் கூறாத பிரிவுகளையும் பொருள் களையும் அந்த நூற்பாக்களின் மேலேற்றி கூறியுள்ளனர். தொல்காப்பியர் இவ்வாறு கூறும் கூற்றுகளை ‘துறை’ என்ற பெயரால் எங்கும் வழங்கவில்லை. மேலும் துறைகளை முறையாகச் சொல்லி விளங்க வைத்தலும் தொல்காப்பியரின் நோக்கமில்லை. துறை களை வைத்து முறைப்படி சொல்லிச் செல்லும் போது நிகழ்ச்சிகளாக அவற்றை அறுதியிட்டுக் களவு முதலிய அகப்பொருள் இலக்கணத்தின் அடிப்படையில், கால வரிசைப்படி அமைக்க நேரிடும். ஆனால் தொல்காப்பியர் மரபோ இத்தகைய வரிசை முறை எதையும் நோக்காமல் கூற்றுகளை மட்டும் தொகுத்துச் சொல்வதாக அமைகிறது. இந்த மரபில் கால வரிசையோ நிகழ்ச்சி ஒழுங்கோ அமையாது. எனவே தொல்காப்பிய உரையாசிரியர்களான இளபூரணர், நச்சினார்க்கினியரின் இத்தகைய கருத்திற் கான காரணங்களை ஆராயும்போது அவர்கள் தோன்றிய காலத்தில் அவர்களுக்கு முன் எழுந்த இலக்கண நூல்களையும் அவற்றின் உரைகளையும் கற்று, தம் உரைகளில் இந்தக் கருத்துகளை ஏற்றி உரைப்பதனால் இப்பாகுபாடுகள் இவர்களது உரைகளில் காணப்படுகின்றன.

## துணைநூற்பட்டியல்


1. சதீஷ்.அ., வ.உ.சி பதிப்பித்த தொல் காப்பியம் பொருளதிகாரம் (இளம்பூரணர்), தமிழ்நாடு பாடநூல் மற்றும் கல்வியியல் பணிகள் கழகம், சென்னை, 2022.
2. சாமிநாதையர்.உ.வே., தமிழ்நெறி விளக்கம், டாக்டர் உ. வே சாமிநாதையர் நூல் நிலையம், சென்னை, 2015.
3. சீனிவாசன். இரா., தமிழ் இலக்கண மரபுகள் – கி. பி. 800 – 400, தி பார்க்கர், சென்னை, 2000.
4. தாமோதரன்.அ., இறையனார் களவியல், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை, 2013.
5. மருதநாயகம்.ப., தொல்காப்பியம், செம்மொழித் தமிழாய்வு மத்திய நிறுவனம், சென்னை, 2022.
6. மாணிக்கம். வ. சுப., தமிழ்க்காதல், மணிவாசகர் பதிப்பகம், சென்னை, 2019.
7. வெள்ளைவாரணன். க., நாற்கவிராசநம்பி இயற்றிய அகப்பொருள் விளக்கம், பாரி நிலையம், சென்னை, 2022.